JANUARY 2025 |VOL.1, ISSUE NO. 2

# RMRL NEWSLETTER

A monthly bulletin of RMRL to educate, interpret, and inform




## சிந்துவெளி ஆய்வு மையம்

### தமிழ்நாட்டில் சிந்துவெளி ஆராய்ச்சிக்கான களம்

சுந்தர் கணேசன், இயக்குநர், RMRL

தமிழ்ப் பண்பாடு, சமூக வரலாறு சார்ந்த ஆய்வுகளுக்கு ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம், முக்கியமான பங்களிப்புகளைச் செய்து வருகிறது. 1994ஆம் ஆண்டு, நூலகம் தொடங்கப்பட்ட நாள் முதல் பொது மக்களுக்கும் ஆய்வாளர்களுக்கும் நூலகச் சேவைகளை வழங்கி வருவதோடு நூல் பாதுகாப்பு, ஆவணமாக்கல், நூற்பட்டியல் தயாரித்தல் போன்ற செயல்பாடுகளை மேற்கொண்டு வந்துள்ளது. .

சிந்துவெளி ஆய்வுகளில் ஆழ்ந்த கவனத்தைச் செலுத்தி, முன்னோடி ஆய்வாக The Indus Script: Texts, Concordance and Tables என்ற பெரும் நூலையும் பல ஆய்வுக் கட்டுரைகளையும் வெளியிட்ட அறிஞர் ஐராவதம் மகாதேவன் நூலகத்துடனும் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார். அவர் ஜவஹர்லால் நேரு நினைவு நல்கையின் மூலம் சிந்துவெளி ஆராய்ச்சியை மேற்கொண்டார். சிந்துவெளி முத்திரைகளைக் கையால் நகலெடுத்து, பின்னர் வரைகலை நிபுணர்களை ஈடுபடுத்தி, சிந்துவெளி தொடரடைவின் தரப்படுத்தப்பட்ட ஒரு அடையாளப் பட்டியலை உருவாக்கினார். இந்தியாவில் கணினிகள் அறிமுகப்படுத்தப்பட்ட காலத்தில், மும்பையில் உள்ள அடிப்படை ஆய்வுக்கான டாடா நிறுவனத்தின் (Tata Institute of Fundamental Research) மூலம் கணினிகளைத் தனது சிந்துவெளி ஆராய்ச்சிக்குப் பயன்படுத்தி, 1977ஆம் ஆண்டு The Indus Script: Texts, Concordance and Tablesஐ உருவாக்கினார். இதில் அவருக்கு உதவியாக டி. ராஜேஸ்வரி (ஆய்வுக்கு உதவியாக), மைதிலி ரங்கராவ் (கணிணி), என். சௌந்தரராஜன் (மென்பொருள் ஒருங்கிணைப்பு),




அமர்நாத் சர்மா (வரைகலை) ஆகியோர் ஈடுபட்டனர். இந்த நூலை இந்திய தொல்லியல் கழகம் வெளியிட்டது. 1977ஆம் ஆண்டுவரை கண்டுபிடிக்கப்பட்ட அனைத்து சிந்துவெளி முத்திரைகளையும் ஐராவதம் மகாதேவன் தனது நூலின் மூலம் வெளிக்கொண்டுவந்தார். இன்றளவும் இது ஒரு முக்கியமான நூலாகவும் சிந்துவெளி எழுத்துகளை ஆராய்வதற்கு அடிப்படை நூலாகவும் அமைந்துள்ளது. இதற்கடுத்து, தொடர்ந்து சிந்துவெளி குறித்து பல ஆய்வுக் கட்டுரைகளை எழுதி ஆய்விதழ்களில் வெளியிட்டார்.

சிந்துவெளிப் பண்பாடு கண்டுபிடிக்கப்பட்ட நாள்முதலே, திராவிடத்திற்கும் சிந்துவெளிக்கும் இடையிலான தொடர்பு அறிஞர்களின் பேசு பொருளாக இருந்தது. அடுத்த கட்டமாக, பண்டைய தமிழ் இலக்கியத்தைக் கொண்டு சிந்துவெளி எழுத்துகளைப் வாசிப்பதற்கான முயற்சியை ஐராவதம் மகாதேவன் மேற்கொண்டார். தமிழ்நாட்டில் சிந்துவெளி தொடர்பான ஆய்வுகளை முன்னெடுக்க ஓர் ஆய்வு மையத்தின் தேவையை உணர்ந்த மகாதேவன் ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்தில் அந்த மையத்தை உருவாக்க நினைத்தார். அது குறித்த ஆலோசனையை என்னிடம் கூறினார். தென்னிந்தியாவில் பல்வேறு நிறுவனங்கள் இருந்தபோது, ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்தில் சிந்துவெளி ஆய்வு மையத்தை அமைக்க வேண்டும் என நினைத்தது முக்கியமானது.

ஐராவதம் மகாதேவனின் ஆலோசனையின்படி 2007ஆம் ஆண்டு ‘சிந்துவெளி ஆய்வு மையம்’ (Indus Research Centre) ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்தில் உருவாக்கப்பட்டது. அந்நாளைய தி இந்து ஆங்கில நாளேட்டின் தலைமை ஆசிரியராக இருந்த திரு. என். ராம் அவர்கள் இந்த மையத்தினைத் துவங்கி வைத்தார்.

சிந்துவெளி ஆய்வு மையத்தின் முதல் மதிப்புறு ஆலோசகராக ஐராவதம் மகாதேவன் செயல்பட்டார். மகாதேவன், தனது ஆராய்ச்சிப் பணிகளையும் ஆய்வுகளையும் உறுதியான அறிவியல் முறைப்படியான ஆதாரங்களின்வழி முன்வைத்தார். அதனையே இந்த மையத்தின் முக்கியமான நோக்கமாக்கினார். அதன்படி அறிவியல்பூர்வமானதாகவும் தரவுகளின் அடிப்படையிலும் அமைந்த ஆய்வுகளையே சிந்துவெளி ஆய்வு மையம் ஆதரித்து வருகிறது . இந்த ஆய்வு மையத்தில் இருந்து Bulletin of the Indus Research Centre என்ற சிந்துவெளி தொடர்பான ஆய்விதழும் கொண்டுவரப்பட்டது. அதன்வழியும் முக்கியமான சிந்துவெளி ஆய்வுகள் வெளிவந்தன.  வரலாற்றிற்கு முற்பட்ட காலம், சிந்துவெளிப் பண்பாடு, பண்டைய தமிழ்ச் சமூக-பண்பாடு உள்ளிட்ட தளங்களில் எழுதப்படும் கட்டுரைகளை இந்த ஆய்விதழ் வெளியிடுகிறது.

2010ஆம் ஆண்டு கோவையில் செம்மொழி மாநாட்டில் அன்றைய முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்கள் சிந்துவெளி ஆய்வுக்கும்  ஒரு தனியான அமர்வை அமைத்துக் கொடுத்தார். அதில் ஐராவதம் மகாதேவன், அஸ்கோ பர்போலா, ஆர். பாலகிருஷ்ணன் உள்ளிட்ட பல சிந்துவெளி ஆய்வாளர்கள் முக்கியமான ஆய்வுக் கட்டுரைகளை வாசித்தனர். அதே மாநாட்டில் ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்தின் சிந்துவெளி ஆய்வு மையம் சிந்துவெளிப் பண்பாடு குறித்த ஒரு கண்காட்சியை வடிவமைத்து, காட்சிப்படுத்தியது. கிட்டதட்ட 7000 சதுர அடியில் அமைக்கப்பட்ட இந்தக் கண்காட்சியை 2 இலட்சத்திற்கும் மேற்பட்ட பார்வையாளர்கள் கண்டுகளித்தனர். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடன் இன்றைய மாண்புமிகு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களும் மற்ற அமைச்சர்களும் இந்தக் கண்காட்சியில் கலந்து கொண்டனர்.

அங்கு வடிவமைக்கப்பட்டிருந்த சிந்துவெளிப் பண்பாட்டுக் கண்காட்சியைக் காண அஸ்கோ பர்போலா, அதை ஒரு நிரந்தரமான கண்காட்சியாக சென்னையில் அமைக்கும்படி கூறினார். சிந்துவெளியில் ஆழக்கால் பதித்து, முக்கியமான ஆய்வுகளை வெளியிட்ட பன்னாட்டு அறிஞரான அஸ்கோ பர்போலா, இதுபோன்றதொரு கருத்துரைக்கும் அளவிற்கு சிந்துவெளியைக் கண்முன் காட்டியது அக்கண்காட்சி. இது எத்தகைய தன்மையில் சிந்துவெளி ஆய்வுகளை அசலான முறையில் அறிவியல்பூர்வமான வழிகளில் அணுகுகிறது என்பதற்குச் சாட்சியாகும்.

ஐராவதம் மகாதேவன் வெளியிட்ட சிந்துவெளி தொடர்பான தொடரடைவு நூல், 1977ஆம் ஆண்டு வரையிலான சிந்துவெளி முத்திரைகளை மட்டுமே கொண்டிருந்தது. அதற்கு அடுத்து கண்டுபிடிக்கப்பட்ட




முத்திரைகளைக் கொண்டு ஒரு புதிய முழுமையான பதிப்பினைக் கொண்டுவர வேண்டுமென நினைத்தார். இதற்கு 5 பேர் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டது. அதில் நானும் ஒருவன். அந்தக் குழுவிற்கு ஐராவதம் மகாதேவன் பயிற்சி அளித்தார். அதாவது ஒரு முத்திரையை எவ்வாறு பார்க்க வேண்டும், எவ்வாறு படியெடுக்க வேண்டும், அதில் உள்ள கூறுகள் ஒவ்வொன்றையும் எத்தகைய தன்மையில் வகைதொகைப்படுத்தி புரிந்து கொள்ளவேண்டும் உள்ளிட்ட பல பயிற்சிகளை அளித்தார். அஸ்கோ பர்போலா சிந்துவெளியில் கண்டெடுக்கப்பட்ட அனைத்து முத்திரைகளையும் புகைப்படங்களாகப் பதிப்பித்து மூன்று தொகுதிகளாக வெளியிட்டுள்ளார். அவையும் இப்பயிற்சிக்குப் பயன்படுத்தப்பட்டன.


ஐராவதம் மகாதேவனின் சிந்துவெளி எழுத்துகள் சார்ந்த ஆராய்ச்சி, அவரைப் பண்டைய வரிவடிவங்கள் குறித்த ஆராய்ச்சிக்குக் இட்டுச் சென்றது. அவர் Early Tamil Epigraphy: From the Earliest Times to the Sixth Century A.D. என்ற முக்கியமான நூலை வெளியிட்டார். Harvard Oriental Series என்ற வரிசையில் இந்நூல் வெளியானது. தமிழ் பிராமி குறித்து பல ஆய்வுகளை அவர் செய்ய வேண்டியிருந்ததால் சிந்துவெளி ஆய்வு மையத்தில் முழுவதுமாக தன்னை ஈடுபடுத்திக் கொள்ள முடியவில்லை. பின்னர் 2012ஆம் ஆண்டு ஆர். பாலகிருஷ்ணன் அவர்களை மதிப்புறு ஆலோசகராக நியமிக்குமாறு ஐராவதம் மகாதேவன் பரிந்துரைத்தார்.

2012ஆம் ஆண்டு முதல் மதிப்புறு ஆலோசகராக செயல்படத் தொடங்கிய பாலகிருஷ்ணன் அரசுப் பணியிலிருந்து இரண்டு ஆண்டுகள் விடுப்பு எடுத்து சிந்துவெளி குறித்த ஆராய்ச்சியை மேற்கொண்டார். ஆனால் 2014ஆம் ஆண்டிற்கான தேர்தல் நடத்துவதற்காக இந்திய தேர்தல் ஆணையம் அவரை ஓர் ஆண்டிலேயே அழைத்துக் கொண்டது. இக்குறிப்பிட்ட ஒரு ஆண்டில் கடுமையான ஆராய்ச்சியில் ஈடுபட்டார். அதன் பயனாக, சிந்துவெளி நகரங்களின் 'மேல்-மேற்கு: கீழ்-கிழக்கு' வடிவமைப்பும் அதன் திராவிட அடித்தளமும் என்று சிந்துவெளியில் அமைந்த நிலவியல் சார்ந்த முக்கியமான கருத்துருவாக்கத்தை ஓர் அறிவியல்பூர்வமான ஆய்வின்வழி சுட்டிக்காட்டினார். இது சிந்துவெளியின் திராவிடக் கருதுகோளுக்கு வலுசேர்த்தது.

சிந்துவெளி ஆய்வு மையத்தின் ஆய்விதழில் வெளிவந்த இக்கட்டுரை பரவலாகக் கவனத்தைப் பெற்று சிந்துவெளி ஆய்வுகளில் முக்கியமான இடத்தைப் பெற்றது. இதனைத் தொடர்ந்து, இதன் தமிழாக்கம் சிந்துவெளி ஆய்வு மையம் மற்றும் பாரதி புத்தகாலயத்தின்வழி சிந்துவெளிப் பண்பாட்டின் திராவிட அடித்தளம் என்ற தலைப்பில் நூலாக வெளியிட்டது. 2016ஆம் ஆண்டு முதற்பதிப்பாக வெளியான இந்நூல் தொடர்ந்து 16 பதிப்புகள் கண்டுள்ளது. இந்நூலுக்கு ஐராவதம் மகாதேவன் அணிந்துரை எழுதினார். இன்றும் இந்நூலைத் தமிழ் மக்கள் கொண்டாடி வருகின்றனர்.

பாலகிருஷ்ணன் 30 ஆண்டுகளுக்கு மேலாகச் செய்த ஆய்வின் பயனாக எழுதிய Journey of a Civilization: Indus to Vaigai என்ற பெருநூல் ஆங்கிலத்தில் 2019ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. இது தொல்லியல், வரலாறு, இடப்பெயராய்வு, மானிடவியல், இலக்கியவியல், மொழியியல், நாட்டார் வழக்காற்றியல், மரபணுவியல் உள்ளிட்ட பல்துறை புலமைகளையும் தரவுகளையும் ஒருங்கிணைத்து எழுதப்பட்ட நூலாகும். இதில் பல இடங்களில் தரவுகள் காட்சிகளாகவே வெளிப்படுத்தப்பட்டுள்ளன. முன்மாதிரி இல்லாத இந்நூலின் வடிவமைப்பு சிந்துவெளி ஆய்வு மையத்திலேயே உருவாக்கப்பட்டது. மேலும் இதில் இடம்பெற்ற வரைபடங்கள், அட்டவணைகள், பட்டியல் தரவுகள் உள்ளிட்டவையும் இங்கே உருவாக்கப்பட்டன. அந்நூல் சிந்துவெளி ஆய்வாளர்கள் மத்தியில் மட்டுமல்லாமல், அரசியலாளர்கள் மற்றும் வரலாற்று ஆர்வலர்கள் மத்தியிலும் பெரும் தாக்கத்தை உண்டாக்கியது.

இதன் தமிழ்ப் பதிப்பான, ஒரு பண்பாட்டின் பயணம்: சிந்து முதல் வைகை வரை நூலை 2023ஆம் ஆண்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டார். இந்நூலின் ஆங்கில மற்றும் தமிழ்ப் பதிப்புகள் இரண்டுமே 10,000 பிரதிகளுக்கு மேல் விற்றுத் தீர்ந்தன. இந்நூல்களைக் கொண்டு வாசிப்பு வட்டங்கள், கருத்தரங்குகள், ஆய்வரங்குகள் என ஓர் இயக்கமாகவே தமிழ்நாடு மட்டுமல்லாமல், உலகின் பல பகுதிகளில் நடைபெற்று வருகின்றன. இந்நூல் சிந்துவெளி ஆய்வு




மையத்தின் முக்கியமான பங்களிப்பாகும். சிந்துவெளி ஆய்வு மையத்தில் மதிப்புறு ஆலோசகராக ஆர். பாலகிருஷ்ணன் தொடர்ந்து செயல்பட்டு வருகிறார். தற்போது சிந்துவெளி ஆய்வுகள் அவர் வழிகாட்டுதலில் இயங்கி வருகின்றன.

சிந்துவெளி ஆய்வு மையம், ஐராவதம் மகாதேவன் உருவாக்கிய தொடரடைவினைப் பரந்த அளவில் கொண்டு சேர்க்க வேண்டும் என்று நினைத்தது. ஆனால் 1977ஆம் ஆண்டு இந்தியத் தொல்லியல் கழகத்தின்வழி வெளிவந்த அந்த நூலின் பிரதிகள் இன்று விற்பனைக்கு இல்லை. புதிதாக சிந்துவெளி ஆய்வுகளில் கவனம் செலுத்தும் ஆய்வாளர்களுக்கு அந்நூல் தேவையாக இருந்தது. அது ஒரு கருவி நூலாகவும் அமைந்திருப்பதால், அதனை எளிதாக வேகமாகக் குறிப்புகளை எடுக்கவும், முத்திரைகளை ஒப்பிட்டுப் பார்க்க வேண்டிய தேவையும் இருந்தது. அதனால் அந்நூலை, சிந்துவெளி ஆய்வு மையம், தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையுடன் இணைந்து இணைய செயலியாக (web application) மாற்றி ஆய்வாளர்கள், மாணவர்கள், தொல்லியல் ஆர்வலர்கள் என பொதுமக்களின் பயன்பாட்டிற்காக வெளியிட்டது. இந்த இணைய செயலியின்வழி நாம் தேடும் குறிப்பிட்ட முத்திரையுடன் தொடர்புடைய மற்ற சிந்துவெளி முத்திரைகளின் விவரங்களையும் அந்த முத்திரைகள் கிடைக்கப்பெற்ற இடங்களின் விவரத்தினையும் ஒரே இடத்தில் காணலாம். சிந்துவெளி ஆய்வுகளில் உள்ள மொழியியல் சிக்கல்களைத் தீர்ப்பதற்கும் இந்தச் செயலி முக்கியப் பங்காற்றி வருகிறது.

1924ஆம் ஆண்டு செப்டம்பர் 20ஆம் நாள், சிந்துவெளிப் பண்பாடு குறித்து உலகிற்கு அறிவிக்கப்பட்ட நாளாகும். இதனை நினைவுகூரும் விதமாக, 2018 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 20 நாளை, 'சிந்துவெளி நாளாக' அறிவித்து, அன்று கருத்தரங்கை ஒருங்கிணைத்து நடத்தி வருகிறது சிந்துவெளி ஆய்வு மையம். இவ்வாண்டின் (2024) தொடக்கத்தில் சிந்துவெளிப் பண்பாட்டுக் கண்டுபிடிப்பு – நூற்றாண்டு (1924–2024) முத்திரையை வெளியிட்டு, பல செயல்பாடுகளை முன்னெடுத்தது. தமிழ்த்தடம் 'சிந்துவெளிப் பண்பாட்டுக் கண்டுபிடிப்பு – நூற்றாண்டு சிறப்பிதழை' ஒருங்கிணைத்து வெயிட்டது. இத்துடன் சிந்துவெளி தொடர்பாக அறிஞர் ஐராவதம் மகாதேவன் எழுதிய அனைத்து கட்டுரைகளையும் தொகுத்து, நூலாக பதிப்பித்து, வெளியிடும் செயல்பாட்டையும் சிந்துவெளி ஆய்வு மையம் மேற்கொண்டு வருகிறது. அந்தத் தொகுப்பு நூல் விரைவில் வெளிவரும்.

1940களிலிருந்தே அவ்வப்போது சிந்துவெளி தொடர்பான ஒரு சில நூல்கள் தமிழில் வெளிவந்திருந்தாலும், அவை பெரும் விவாதத்திற்கான களமாகவோ, பலரையும் உள்ளடக்கிய செயல்பாடாகவோ மாற்றம் கொள்ளவில்லை. ஆனால் சிந்துவெளி ஆய்வு மையம் செயல்படத் தொடங்கிய பின்பு, அது தமிழ்நாட்டில் சிந்துவெளித் தொடர்பான பல்வேறு விவாதங்களை உண்டாக்கியது, பல்வேறு விவாதங்களுக்குக் களம் அமைத்துக் கொடுத்தது, பல்வேறு ஆய்வாளர்களை உள்ளடக்கியும் ஆய்வாளர்களுக்கான கருவிகளை உருவாக்கியும் தரவு சார்ந்த ஆராய்ச்சிக்கு நகர்த்தியது.

2025 ஜனவரி 05 முதல் 07 வரை சிந்துவெளி நூற்றாண்டு நிறைவு பன்னாட்டு கருத்தரங்கத்தை தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையுடன் இணைந்து ஏற்பாடு செய்திருந்தோம். இதை தமிழ்நாடு முதலமைச்சர் தொடங்கிவைத்தார். இதில் இந்தியாவில் இருந்தும் வெளிநாட்டில் இருந்தும் வந்திருந்த பல்வேறு ஆய்வாளர்கள் தங்களது ஆய்வுகளை விளக்கினார்கள். இதில் 500க்கும் மேற்பட்டோர் பங்கெடுத்தனர். இக்கருத்தரங்கில் தமிழ்நாடு முதலமைச்சர் மூன்று அறிவிப்புகளை வெளியிட்டார். சிந்துவெளி எழுத்து புதிரை விடுவிப்பவர்களுக்கு 1 மில்லியன் அமெரிக்க டாலர் பரிசு வழங்கப்படும். தொல்லியலாளர்களை ஊக்குவிக்கும் வகையில் ஆண்டுதோறும் 2 அறிஞர்களுக்கு விருது வழங்கப்படும். தொல்லியல் அறிஞர் ஐராவதம் மகாதேவன் பெயரில் சிந்துவெளி ஆய்வு மையத்தில் ஆய்வு இருக்கை அமைக்கப்படும். எதிர்கால ஆய்வுகளுக்கு இது மாபெரும் உந்துதலாகும்.


இவ்வகையில் தமிழ்நாட்டில் சிந்துவெளிப் பண்பாடு தொடர்பான கவனத்தை உண்டாக்கி சிந்துவெளி ஆய்வு மையம் தொடர்ந்து செயல்படுகிறது.

# சொல்பொருள்

ஆர். விஜயசங்கர்

தமிழ் மொழியார்வம் இருக்கும் எவரும் அகராதிகளையும் அவற்றுக்கு முன்னோடியான நிகண்டுகளைக் கண்டு பயனுற்றிருப்பர். ஆனால் தமிழ் அகராதிகள் உருவாகி வளர்ந்த கதை பெரும்பாலான தமிழ்ப் புலவர்களுக்கே கூடத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. இதில் கூடுதல் ஆச்சரியம் என்னவெனில் அத்தகைய வரலாறு ஆங்கிலத்தில் இருப்பதுதான். அதன் பெயர் Colporul: A History of Tamil Dictionaries (சொல்பொருள்: தமிழ் அகராதிகளின் வரலாறு). ஹாங்காங் அறிவியல், தொழில்நுட்ப பல்கலைக் கழகத்திலிருக்கும் மொழிகளுக்கான மையத்தின் இயக்குனராகவும், சென்னையிலிருக்கும் உலக தமிழாராய்ச்சி நிறுவனத்தின் ஆய்வாளராகவும் இருந்த கிரிகரி ஜேம்ஸ் தொகுத்த இந்த நூல் 2000ஆம் ஆண்டில் கிரியா பதிப்பகத்தினால் வெளியிடப்பட்டது.

தமிழ் அகராதிகள் காலவரிசைப் படி அடைந்த பரிணாம வளர்ச்சியையும் அவற்றின் சமூக, அரசியல் மற்றும் வரலாற்று முக்கியத்துவத்தையும் தொடர்பு படுத்தி இந்தத் தொகுப்பை அவர் உருவாக்கியிருக்கிறார். ஆப்பிரிக்கா, அமெரிக்கா, ஆசியா, ஐரோப்பா ஆகிய கண்டங்களின் 15 நாடுகளில் இருக்கும் 70 நூலகங்களில் காணப்படும் அகராதியியல் (lexicography) தொடர்பான எண்ணற்ற நூல்களையும், பிரசுரிக்கப்படாத கையெழுத்துப் பிரதிகளையும் 907 பக்கங்களைக் கொண்ட இந்நூலில் கிரிகரி ஜேம்ஸ் பட்டியலிட்டிருக்கிறார். இதில் பனையோலை மற்றும் கையெழுத்துப் பிரதிகளும், 17 ஆம் நூற்றாண்டிலிருந்து இன்று வரை வெளியாகியிருக்கும் தமிழ் அகராதிகளின் விவரங்களைப் படங்களுடன் விளக்கும் குறிப்புகளும், பிரெஞ்சு, ஜெர்மன், லத்தீன் மற்றும் போர்த்துக்கீசிய மொழிகளில் வெளியான முதல் மொழிபெயர்ப்புகளும், அகராதியியல் தொடர்பான இணையதளங்களின் பட்டியலும் மற்றும் வரலாறு, மொழியியல் போன்ற புலங்களில் மொழி தொடர்பாக வெளியாகியிருக்கும் ஆய்வுகளை உள்ளடக்கிய அகராதியியல் உருவாக்க முறைகளை எடுத்துக் கூறும் பிரதிகளும் அடங்கும்.




"தமிழ் மரபு குறித்து வெளி வந்திருக்கும் கையெழுத்துப் பிரதிகளும் நூல்களும் தொகுப்புகளாக சிதறிக் கிடக்கின்றன.... இந்த முக்கியமான சொத்துக்கள் வருங்காலத் தலைமுறைகளுக்காகப் பாதுகாக்கப்பட வேண்டுமென்றால், அவற்றை அடையாளப் படுத்தி, வரிசைப்படுத்தி, எண்ணுருவாக்குவதற்குத் தேவையான ஒரு திட்டத்திற்காக நிதியாதாரங்கள் ஒதுக்கப்பட வேண்டும்."

நூல் உருவாக உதவியவர்களுக்கு நன்றி தெரிவித்து கிரிகரி ஜேம்ஸ் எழுதியுள்ள உரையில் இவ்வாறு கூறுகிறார்: 'தமிழ் மரபு குறித்து வெளி வந்திருக்கும் கையெழுத்துப் பிரதிகளும் நூல்களும் உலகெங்கிலுமுள்ள சிறிய, பெரிய அளவிலான பொது மற்றும் தனியார் தொகுப்புகளாக உலகெங்கிலும் சிதறிக் கிடக்கின்றன. இவற்றில் பெரும்பாலானவை, குறிப்பாக பனையோலைகள் அழிந்து வருகின்றன. அவை முறையாக அடையாளப்படுத்தப் படாமல் இருக்கின்றன என்பது இனியும் மோசமான நிலை. இந்த முக்கியமான சொத்துக்கள் வருங்காலத் தலைமுறைகளுக்காகப் பாதுகாக்கப்பட வேண்டுமென்றால், அவற்றை அடையாளப் படுத்தி, வரிசைப்படுத்தி, எண்ணுருவாக்குவதற்குத் தேவையான ஒரு திட்டத்திற்காக நிதியாதாரங்கள் ஒதுக்கப்பட வேண்டும்."

நூலின் உள்ளடக்கம் 10 அத்தியாயங்களாகப் பிரிக்கப் பட்டிருக்கிறது. அவையாவன:

1. சமூக-வரலாற்றுப் பின்னணி;
2. நிகண்டு மரபு;
3. முதல் மிஷனரிகள்;
4. புரோட்டஸ்டண்டுகள்
5. 20ஆம் நூற்றாண்டிற்குள்;
6. சமகாலச் சூழல்;
7. இந்தியாவுக்கு வெளியே தமிழ்;
8. சொல்வளத்தின் வளர்ச்சி;
9. பிரச்சினைகளும், பார்வைகளும்;
10. ஒரு புதிய ஆயிரமாண்டினை நோக்கி.

இவை தவிர, ஒன்பது பின் இணைப்புகள் சுமார் 170 பக்கங்களில் கொடுக்கப் பட்டிருக்கின்றன. பின் இணைப்புகளில் ஒன்று தமிழ் அகராதியியல் தொடர்பான நூற்றுக்கும் மேற்பட்ட இணைய தளங்களின் பட்டியலாகும். நூலுக்கான ஆதாரங்களின் பட்டியல் மட்டும் 117 பக்கங்களுக்கு நீள்கிறது.


இப்படிப்பட்ட ஒரு தொகுப்பிற்குப் பின்னாலிருக்கும் அறிவுத் திறனும், தெளிவும், கூட்டு உழைப்பும் வியக்க வைக்கின்றன.

தமிழார்வலர்களுக்கும் ஆய்வாளர்களுக்கும் இது ஒரு அரிய பொக்கிஷமாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

# IM77 இணைய செயலி

## சிந்துவெளி எழுத்துகளுக்கான தொடரடைவு


மணிகண்ட சுப்பு




அறிஞர் ஐராவதம் மகாதேவன், 1970ஆம் ஆண்டு ஜவஹர்லால் நேரு நினைவு நிதியிலிருந்து உதவித்தொகை பெற்று சிந்துவெளி எழுத்துகளுக்கான ஆராய்ச்சியை மேற்கொண்டார். சிந்துவெளி எழுத்துகளுக்கான பொருள் இன்னும் தெளிவாகத் தெரியாதபட்சத்தில் அதற்கான பொருளைக் கண்டடைய ஆய்வாளர்களுக்கு உதவும் நோக்கில் சிந்துவெளிப் பொறிப்புகளைக் கொண்டு அதற்கான தொடரடைவை உருவாக்கும் முயற்சியை அவர் மேற்கொண்டார். அதன் விளைவாக சிந்துவெளி எழுத்துகளுக்கான ஒரு கருவி நூலாகவும் ஆதார நூலாகவும் The Indus Script: Texts, Concordance and Tables என்ற பெருநூலை இந்தியத் தொல்லியல் கழகத்தின்வழி 1977ஆம் ஆண்டு வெளியிட்டார்.

தொடரடைவு என்பது ஒரு நூலில் இடம்பெறும் முதன்மையான அல்லது முக்கியமான சொற்கள், அவற்றின் சூழமைவு, அவை இடம்பெறும் சொற்றொடர்களோடு அகரவரிசைப்படுத்தப்பட்ட பட்டியலாகும். ஒரு நூலில் உள்ள முதன்மையான சொற்கள் இடம்பெறும் தொடர்கள் அனைத்தையும் ஓரிடத்தில் பெறுதலுக்கு தொடரடைவு உதவுகிறது. ஒரே சொல்லின் வெவ்வேறு வகையான பயன்பாடுகள், வேர்ச்சொல் சார்ந்த ஆய்வுகள், சொற்கள் கையாளப்படும் விதம், வாக்கிய அமைப்புகளைக் கண்டறிதல், வகைப்படுத்துதல் முதலியவற்றிற்குத் தொடரடைவு பயன்படுகிறது. அதன்படி சிந்துவெளிப் பண்பாட்டில் கிடைக்கப்பெற்ற முத்திரைகளைக்கொண்டு சிந்துவெளி எழுத்துகளுக்கான தொடரடைவை ஐராவதம் மகாதேவன் உருவாக்கினார்.

The Indus Script: Texts, Concordance and Tables நூலின் பிரதிகள் தற்போது விற்பனைக்கு இல்லை. ஆனால் ஆய்வாளர்களின் மத்தியில் இந்நூலின் தேவை அதிகரித்துள்ளது. இதற்கடுத்து, சிந்துவெளி எழுத்துகளில் களக்குறியீடுகளின் வகைப்பாடு எனும் புதிய தரவுகளையும் திரு. மகாதேவன் இதில் இணைத்தார். இவ்வனைத்தினையும் இணைத்து சென்னை, ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம், சிந்துவெளி எழுத்துகளுக்கான ஓர் இணைய செயலியை உருவாக்கி உள்ளது.



MEMOIRS OF THE ARCHAEOLOGICAL SURVEY OF INDIA No. 77

**THE INDUS SCRIPT**

**Texts, Concordance and Tables**

IRAVATHAM MAHADEVAN

*Computer Programmes:*
MYTHILI RANGARAO

*Composition Software:*
N. SOUNDARARAJAN

*Research Assistant:*
T. RAJESWARI

*Graphic Arts:*
AMARNATH SHARMA

COMPILED IN TECHNICAL COLLABORATION WITH
THE COMPUTER GROUP AND
THE NATIONAL CENTRE FOR SOFTWARE DEVELOPMENT AND COMPUTING TECHNIQUES
THE TATA INSTITUTE OF FUNDAMENTAL RESEARCH
BOMBAY

**Published by The Director General**
**Archaeological Survey of India**
NEW DELHI

1977


இதற்குத் தமிழ்நாடு அரசாங்கத்தின் தொல்லியல் துறை நிதிநல்கையினை வழங்கியுள்ளது. இந்த இணைய செயலி ஒரு வலை பயன்பாடாக (web application) ஆய்வாளர்கள், மாணவர்கள், தொல்லியல் ஆர்வலர்கள் என பொதுமக்களின் பயன்பாட்டிற்காக வெளியிடப்பட்டுள்ளது. சிந்துவெளி ஆய்வுகள் அதிகரிப்பதற்கும் சிந்துவெளி ஆய்வுகளில் உள்ள மொழியியல் சிக்கல்களைத் தீர்ப்பதற்கும் இந்தச் செயலி முக்கியப் பங்காற்றும். .

சிந்துவெளி எழுத்துகளுக்கான தொடரடைவு IM77 இணைய செயலி, நாம் தேடும் குறிப்பிட்ட முத்திரையுடன் தொடர்புடைய மற்ற சிந்துவெளி முத்திரைகளின் விவரங்களையும் அந்த முத்திரைகள் கிடைக்கப்பெற்ற இடங்களின் விவரத்தினையும் ஒரே இடத்தில் காணலாம்.

சிந்துவெளி மக்கள் பேசியது தொல் திராவிட மொழியாக இருக்கவேண்டும் என்று ஐராவதம் மகாதேவன், அஸ்கோ பர்போலா, ஆர். பாலகிருஷ்ணன் போன்ற அறிஞர்கள் உலகத்திற்கு எடுத்துக் காட்டியுள்ளார்கள். திராவிடத்திற்கும் சிந்துவெளிக்குமான தொடர்புகளை மேலும் மேலும் உறுதியிட்டுக் கூற இந்தச் செயலி ஆய்வுகளுக்கு உறுதுணையாய் இருக்கும் என்று கூறலாம். அதன் இணையப்பக்கம் The Indus Script IM77

# கிரய ஜாபிதா (1902)

முத்துமாலதி






நூற்றி இருபது வருடங்களுக்கும் அதிகமாகக் காலம் கடந்தும் எவ்விதமான புத்தகங்கள் எப்போதெல்லாம் வெளியாயின என்பதையும், பதிப்பு வரலாற்றையும் அறிந்து கொள்வதில் மிக முக்கிய பங்கு வகிக்கும் ஒரு புத்தக விலைப்பட்டியலைப் பற்றிய ஓர் அறிமுகம் இது.

கிரய ஜாபிதா என்ற தலைப்பில் 1902 ஆம் ஆண்டு வெளியானது இந்த விலைப்பட்டியல். மதுரை புதுமண்டபத்தைச் சேர்ந்த புத்தக வியாபாரி மு. கருப்பணபிள்ளை அவர்களுடைய தமிழ், தெலுங்கு மற்றும் கிரந்த புத்தகங்களின் விவரங்கள் அடங்கிய புத்தகங்களின் விவரங்களைக் கொண்ட இந்தப் பட்டியல் பரப்பிரம்மமுத்திராக்ஷரசாலையில் அச்சிடப்பட்டு வெளிவந்துள்ளது.

இதில் புத்தகங்களின் பட்டியல் தலைப்புவாரியாக இலக்கியம் மற்றும் சிற்றிலக்கிய நூல்களான சதகம், அந்தாதி, பிள்ளைத்தமிழ், பதிகம், கோவை, ஆசிரியவிருத்தம், பத்து, காதல், அலங்காரம், கும்மி, தாலட்டு, ஏலப்பாட்டு, பாட்டு, அம்மானை என்றும், இலக்கணம், வைத்தியம், வேதாந்தம், வைஷ்ணவ சாஸ்திரம், புராணம், சட்டப்புத்தகங்கள், மகமதியர்கள் பாடிய தமிழ் நூல்கள், தெலுங்கு, கிரந்தம் மற்றும் பாலர்களுக்கு வேண்டிய நூல்கள் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

பதிப்புகளின் தன்மைகளும் குறிப்பிடப் பட்டுள்ளன; சான்றாக, நயம் பதிப்பு, நாவலர் பதிப்பு, சின்னகன்னையா செட்டியார் பதிப்பு, புஷ்பரதச் செட்டியார் பதிப்பு, ஆப்பயிண்டு தின், காலிகோ நயம் மற்றும் மட்டப் பதிப்பு.

மேலும் நூலில் பயன்படுத்தப்பட்டிருக்கும் தாளின் தரங்களும், அளவுகளும் அதற்கேற்ப மாறும் விலைகளும் குறிப்பிடப்பட்டுள்ளன. சான்றாக, 'திக்கு காயிதம்', அதாவது தடிமனான தாள். எடுத்துக்காட்டாக, அரிச்சந்திர புராணம் -0-6-0, உரை காலிகோ –0-8-0, ஆப்பயிண்டு

–0-4-0, கிளேஸ் நயம் பதிப்பு காலிகோ –1-0-0 என்கிற விவரங்கள் பட்டியலில் இருக்கின்றன. அருட்பா தேவாரத் திரட்டு என்கிற நூலின் வெவ்வேறு பதிப்புகளின் -0-8-0, நயம் பதிப்பு –1-8-0, நாவலர் பதிப்பு –1-14-0, புஷ்பரத செட்டியார் பதிப்பு –1-10-0 என விலை மாற்றத்துடன் புத்தகத்தை வெளியிட்டுள்ளனர்.

இந்தப் பட்டியலில் மிகவும் விலை உயர்ந்த புத்தங்களில் சில:  கந்தபுராணம்: நாவலர் பதிப்பு 7-0-0, மூவர் தேவாரம் அடங்கன்முறை திக்குகாயிதம்- 6-8-0, மற்றும் மெய்கண்டசாஸ்திரம் பட்டுக்கட்டடம்–6-8-0.

மேலும், முகமதியர்கள் எழுதிய நூல்கள் என நூற்றுக்கும் மேற்பட்ட நூல்கள் பட்டியலிடப்படுள்ளது.

இதில் மற்றொரு சுவராசியமான விஷயம் பாலர்களுக்கான நூல்களின் பட்டியலில் மூன்றாம் வகுப்பிற்கான வாசகப் புத்தகத்தில் தமிழ் போப்ஸ் இலக்கணம் என்ற நூல் இடம் பெற்றுள்ளது. மேலும் ‘அறிவிப்பு’ என்ற தலைப்பில் புத்தகங்களை வாங்குவதற்கான வழிமுறைகளும், எழுத்தாணி விற்பனை பற்றிய குறிப்புகளும பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளன. மதுரை இராமனாசாரி வகையறாப் பேர்களால் செய்த கலம் கொம்பெழுத்தாணி, எழுமைக் கொம்பெழுத்தாணி, தந்த எழுத்தாணி, சந்தனமடக்கெழுத்தாணி என எழுத்தாணிகளின் விவரங்களும் குறிப்பிடப்பட்டுள்ளன.

அரையணா ஸ்டாம்பு அனுப்பினால் ஒரு ‘கேட்டலாக்’ (நூல்விலைப் பட்டியல்) அனுப்பப்படும் என்ற விவரமும், Please circulate this amongst your friends என்ற விவரமும் அட்டைப்பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

# AI and MARC cataloguing

R. Prakash

In MARC cataloguing, Artificial Intelligence (AI) can be used to automate various tasks like generating metadata, suggesting subject headings, extracting information from digital texts, and enriching bibliographic records, essentially streamlining the cataloguing process by providing a significant portion of the data automatically, allowing cataloguers to focus on quality control and complex decisions rather than repetitive data entry.

**Key ways AI is used in MARC cataloguing:**

Automatic metadata generation: AI algorithms can analyse book content to automatically populate MARC fields with information like title, author, place, publisher, publication date and series significantly reducing manual data entry.

Subject heading suggestion: AI can suggest relevant Library of Congress Subject Headings (LCSH) based on the book's content, improving the accuracy and consistency of subject access.

Classification: By analysing text, AI can assist in assigning accurate classification numbers based on the content of the material.

Some enthusiasts have developed custom versions of ChatGPT for cataloguing. Here are three custom ChatGPT models that claim to assist with cataloguing tasks and generating MARC records. There is no perfect AI solution for cataloguing yet, these tools are evolving, and companies that develop library software have started incorporating AI features in their products. However, there is still a long way to go.


- MARC-AI Cataloger: creates RDA-compliant MARC records.
- CatalogerGPT: creates MarcEDIT format MARC records from book contents, and determines LCSH, LCC and DDC numbers.
- Cataloging Assistant (DDC and LC Cutter): Catalogue library materials using DDC and LC Cutter.


CatalogerGPT is an AI-powered cataloguing assistant developed by Glen Greenly. The initial version, CatalogerGPT 1.0 for Windows, was developed in 2023. An online version is also available, requiring an OpenAI ChatGPT Plus subscription, with plans to provide access for free ChatGPT users in the future. Additionally, CatalogerGPT 2.0 for Windows is currently in development, aiming to offer enhanced features and capabilities

Using AI for generating parallel script records in MARC is highly beneficial for multilingual and multiscript cataloguing. Parallel script records allow the representation of bibliographic data in multiple scripts, which is crucial for libraries serving diverse communities. Here's how AI contributes:

**Transliteration and Script Conversion:**

AI models, especially those trained in natural language processing (NLP) and optical







திருவள்ளுவரின்
திருக்குறள் தாவரங்கள்

இரா. பஞ்சவர்ணம்

தாவரத் தகவல் மையம்
No 21, காமராஜ் தெரு,
பண்ணுருட்டி – 607 106

http://plantinformaticcentre.blogspot.in
E-mail : plantinformaticcentre@gmail.com



நூல் விளக்கக் குறிப்பு

| | |
|---|---|
| தலைப்பு | : திருவள்ளுவரின் திருக்குறள் தாவரங்கள் |
| நூற்பொருள் | : திருக்குறளில் இடம்பெற்றுள்ள தாவரங்கள் |
| மொழி | : தமிழ் |
| பதிப்பு | : முதற்பதிப்பு |
| வெளியீட்டு நாள் | : 30-04-2018 |
| இடம் | : சென்னைப் பல்கலைக்கழகம் |
| பயன்படுத்திய தாள் | : 72 Gsm |
| வண்ணப்பக்கம் | : 110 Gsm |
| படிகளின் எண்ணிக்கை | : 600 |
| மொத்தப் பக்கங்களின் எண்ணிக்கை | : 400 (400+8) |
| வண்ணப் பக்கங்களின் எண்ணிக்கை | : 8 |
| விலை | : ₹ 400 |
| வெளியீட்டாளர் | : இரா. பஞ்சவர்ணம்<br>காமராஜர் தெரு, பண்ணுருட்டி<br>கைப்பேசி எண் : 98423 34123 |
| ஆசிரியர் | : டாக்டர் இரா.பஞ்சவர்ணம் D.Litt., |
| பதிப்புரிமை | : இரா. பஞ்சவர்ணம்<br>தாவரத் தகவல் மையம்,<br>காமராஜர் தெரு, பண்ணுருட்டி, 607 106. |
| ISBN | : 978-81-923771-8-6 |
| பஞ்சவர்ணம் பதிப்பகம் புத்தக எண் | : 12 |

பஞ்சவர்ணம் பதிப்பகம்

வெளியீடு
பஞ்சவர்ணம் பதிப்பகம்,
காமராஜர் தெரு,
பண்ணுருட்டி, 607 106.
கைப்பேசி எண் : 98423 20001
Web : www.panchavarnampathipagam.com
http://panchavarnampathipagam.blogspot.in
e.mail : panchavarnampathipagam@gmail.com

character recognition (OCR), can:

- Convert text between scripts (e.g., Tamil to Roman, or any Indian script based on ALA-LC Romanization transliteration rules.
- Generate MARC fields (e.g., 245, 260, etc.) in parallel scripts, ensuring uniformity and compliance with cataloguing standards.

Tools are used for this work is Google Translate API or Microsoft Translator,

## Optical Character Recognition (OCR) for Non-Roman Scripts:

For materials with non-Roman scripts, AI-powered OCR tools can:

- Extract text directly from book covers, title pages, or other sources in their native scripts.
- Auto-generate MARC records with parallel scripts in fields like 880 (Alternate Graphic Representation).

**Tesseract OCR** (open-source) or **AWS Textract** used for extracting text from complex scripts.

## Integration with Authority Files

AI ensures consistency in parallel script records by:

- Matching extracted or transliterated text with established authority files (e.g., LC Name Authority File).
- Generating alternate script forms for fields like 100 (Personal Name), 240 (Uniform Title), and 700 (Added Entry).

## Machine Translation for Subject and Title Fields

AI can translate titles, subject headings, and descriptive fields into other scripts while maintaining semantic accuracy. This is critical for generating 245 (Title Statement) and 650 (Subject Added Entry) fields.

## AI cataloguing for Tamil book – our experiment

The title page and verso title page were uploaded into CatalogerGPT and the initial response was given below

```
=LDR  00000nam a2200000 i 4500
=001  [system assigned]
=020  \\$a978-81-923771-8-6
=100  1\$aபஞ்சவர்ணம், இரா.
=245  10$aதிருவள்ளுவரின் திருக்குறள் தவரங்கள் /$cஇரா. பஞ்சவர்ணம்.
=264  \1$aகாமராஜ் தெரு, பன்னூர்பட்டி :$bதாவரத் தகவல் மையம்,$c2018.
=300  \\$a400 pages ;$c21 cm.
=336  \\$atext$btxt$2rdacontent
=337  \\$aunmediated$bn$2rdamedia
=338  \\$avolume$bnc$2rdacarrier
=500  \\$aFirst edition published on 30-04-2018.
=650  \4$aதிருக்குறள்$xவிமர்சனம்.
=650  \4$aதமிழ் இலக்கியம்$xஆராய்ச்சி.
=650  \4$aசிறப்புக் குறிப்புகள்$xதாவரங்கள்.
=650  \4$aஅரசியல் சிந்தனைகள்$xதிருக்குறள்.
=700  1\$aதிருவள்ளுவர்.
=710  2\$aதாவரத் தகவல் மையம்.
=856  41$uhttp://plantinformaticcentre.blogspot.in
=856  41$uhttp://panchavarnampathipagam.blogspot.in
=856  41$umailto:panchavarnampathipagam@gmail.com
```

AI generated the MARC record based on the title page without the parallel script. There are typo errors in title and place.

Second time, instructing the AI to generate the MARC as a parallel script. The output is below:

```
=LDR  00000nam a2200000 i 4500
=001  [system assigned]
=020  \\$a978-81-923771-8-6
=100  1\$aபஞ்சவர்ணம், இரா.$q(Panjavarnam, R.)
=100  1\$aPanjavarnam, R.
=245  10$aதிருவள்ளுவரின் திருக்குறள் தவரங்கள் /$cஇரா. பஞ்சவர்ணம் = Thiruvalluvari
=245  10$aThiruvalluvarin Thirukkural Thavaranangal /$cR. Panjavarnam.
=246  31$aThiruvalluvarin Thirukkural Thavaranangal
=264  \1$aகாமராஜ் தெரு, பன்னூர்பட்டி :$bதாவரத் தகவல் மையம்,$c2018.
=264  \1$aKamaraj Theru, Pannoorpatti :$bThavarat Thagaval Maiyam,$c2018.
=300  \\$a400 pages ;$c21 cm.
=336  \\$atext$btxt$2rdacontent
=337  \\$aunmediated$bn$2rdamedia
=338  \\$avolume$bnc$2rdacarrier
=500  \\$aFirst edition published on 30-04-2018.
=650  \4$aதிருக்குறள்$xவிமர்சனம் = Thirukkural$xCriticism.
=650  \4$aதமிழ் இலக்கியம்$xஆராய்ச்சி = Tamil literature$xResearch.
=650  \4$aசிறப்புக் குறிப்புகள்$xதாவரங்கள் = Special references$xPlants.
=650  \4$aஅரசியல் சிந்தனைகள்$xதிருக்குறள் = Political thoughts$xThirukkural.
=700  1\$aதிருவள்ளுவர்$q(Thiruvalluvar).
=700  1\$aThiruvalluvar.
=710  2\$aதாவரத் தகவல் மையம்$q(Thavarat Thagaval Maiyam).
=710  2\$aThavarat Thagaval Maiyam.
=856  41$uhttp://plantinformaticcentre.blogspot.in
=856  41$uhttp://panchavarnampathipagam.blogspot.in
=856  41$umailto:panchavarnampathipagam@gmail.com
```

This time AI has generated the MARC with parallel script not following the ALA-LC Romanization table with same error.

```
=LDR  00000nam a2200000 i 4500
=001  [system assigned]
=008  240128s2023\\\\tamu\\\\\\\\\\\\000\0\tam\d
=020  \\$a9788123456789
=040  \\$a[Tamil Cataloging Agency]$beng$erda$c[Tamil Cataloging Agency]
=041  1\$atan$heng
=100  1\$aPañcavarṇam, Irā.$q(Panjavarnam, R.)
=100  1\$aபஞ்சவர்ணம், இரா.$q(Pañcavarṇam, Irā.)
=245  10$aTiruvaḷḷuvar iṉ Tirukkuṟaḷ Tavar aṅkaḷ /$cIrā. Pañcavarṇam = Tiruvalluvarin Thir
=245  10$aதிருவள்ளுவரின் திருக்குறள் தவரங்கள் /$cஇரா. பஞ்சவர்ணம் = Tiruvalluvarin
=250  \\$aMutaṉatu patippu. = முதல் பதிப்பு. (First edition)
=260  \\$aCennai :$bTamil Pulavar Publication,$c2023.
=264  \1$aCennai :$bTamil Pulavar Publication,$c2023.
=300  \\$a250 p. ;$c23 cm.
=336  \\$atext$btxt$2rdacontent
=337  \\$aunmediated$bn$2rdamedia
=338  \\$avolume$bnc$2rdacarrier
=490  1\$aTamil ilakkiya araicci ;$v3
=500  \\$aIncludes bibliographical references.
=504  \\$aIncludes index.
=520  \\$aA critical study of errors in classical Tamil literature, particularly in Thiruk
=546  \\$aIn Tamil (tamiḻ moḻiyil).
=650  \0$aTiruvaḷḷuvar.$xCriticism and interpretation.
=650  \0$aTamil literature$xHistory and criticism.
=650  \0$aDidactic poetry, Tamil$xHistory and criticism.
=650  \0$aTamil language$xGrammar and style.
=650  \0$aதிருவள்ளுவர்.$xவிமர்சனம் மற்றும் விளக்கவுரை.
=650  \0$aதமிழ் இலக்கியம்$xவரலாறு மற்றும் விமர்சனம்.
=650  \0$aகற்றுக்கொடுத்தல் கவிதை, தமிழ்$xவரலாறு மற்றும் விமர்சனம்.
=650  \0$aதமிழ் மொழி$xஇலக்கணமும் நடையும்.
=700  1\$aTiruvaḷḷuvar.$tTirukkuṟaḷ.
=700  1\$aதிருவள்ளுவர்.$tதிருக்குறள்.
=830  \0$aTamil ilakkiya araicci ;$v3.
=850  \\$a[Tamil Library Collection]
=856  41$uhttps://www.tamilpulavar.com/thirukkural-thavaranangal
=900  \\$aThiruvalluvar's Thirukkural Errors Analysis.
=950  \\$aClassic Tamil Literature Studies.
=950  \\$aAncient Tamil Grammar.
```

Third time, the same title page, instructing the AI to generate the MARC as a parallel script following ALA-LC Romanization table. The output is below:

```
=LDR  00000nam a2200000 i 4500
=001  [system assigned]
=020  \\$a978-81-923771-8-6
=100  1\$aபஞ்சவர்ணம், இரா.$q(Ra. Panchavarnam)
=245  10$aதிருவள்ளுவரின் திருக்குறள் தாவரங்கள் /$cஇரா. பஞ்சவர்ணம்
=246  1\$iRomanized:$aTiruvaḷḷuvarin Tirukkuṟaḷ Tāvarkaḷ
=260  \\$aகாமராஜ் தெகு, பண்ணூர்பட்டி :$bபஞ்சவர்ணம் பதிப்பகம்,$c2018.
=264  \1$aKāmarāj Teku, Paṇṇūrpaṭṭi :$bPañcavarṇam Patippakam,$c2018.
=300  \\$a600 pages ;$c21 cm
=336  \\$atext$btxt$2rdacontent
=337  \\$aunmediated$bn$2rdamedia
=338  \\$avolume$bnc$2rdacarrier
=500  \\$aIncludes bibliographical references.
=505  0\$a[Detailed chapter contents if available]
=520  \\$aA study on plants mentioned in Tirukkural, the classic Tamil text att
=650  \0$aPlants in literature.
=650  \0$aTirukkural$xCriticism, interpretation, etc.
=650  \0$aTamil literature$xHistory and criticism.
=650  \0$aBotany in literature.
=700  1\$aபஞ்சவர்ணம், இரா.$q(Ra. Panchavarnam),$eauthor.
=710  2\$aபஞ்சவர்ணம் பதிப்பகம்.$q(Pañcavarṇam Patippakam),$epublisher.
=850  \\$a[Library name]
=880  10$aதிருவள்ளுவரின் திருக்குறள் தாவரங்கள் /$cஇரா. பஞ்சவர்ணம்
=880  \\$aகாமராஜ் தெகு, பண்ணூர்பட்டி :$bபஞ்சவர்ணம் பதிப்பகம்,$c2018.
=050  00$aPK2658.T57$bP36 2018
=082  04$a894.811$223
=090  \\$aPK2658.T57$bP36 2018
```

By training the AI with the above steps. Earlier the image is captured by mobile camara. This time I tested with image scanned by the scanner. The result is better.

There are lot of improvement compared to previous output. Except an error in place name.

Typo error was corrected in title. The abstract was rewritten and it conveyed the subject to the book.  The Library of Congress Subject Heading was correctly given.

Still there is need to edit the MARC record. But AI has produced the MARC in a second.

Since 2018, the Library of Congress has been researching and experimenting with artificial intelligence and machine learning, focusing on ethical uses of these technologies, and addressing the challenges of their adoption in libraries and cultural memory organizations.

# சிறந்த தமிழ் நாவல்கள் வெற்றிப் படங்களாவதில்லை, ஏன்?

## ‘பொம்மை’ சினிமா இதழில் (1966) வெளிவந்த விவாதம்

சே. தனபால்

புகழ்பெற்ற எழுத்தாளர் காப்ரியேல் கார்சியா மார்க்கேஸ் எழுதிய One Hundred Years of Solitude என்ற நாவல் தற்போது வெப் சீரியலாக வெளிவந்து, அனைவரின் கவனத்தையும் பெற்றுள்ளது. மார்க்கேஸ் எழுத்தில் இருந்த மாய எதார்த்ததை நன்றாகக் காட்சிப்படுத்தி இருப்பதாக திரை விமர்சகர்கள் எழுதுகின்றனர். அதே நேரத்தில் தமிழ்நாட்டில் மிகவும் பிரபலமான “பொன்னியின் செல்வன்” நாவல் இரண்டு பாகங்களைக் கொண்ட திரைப்படமாக வெளிவந்தபோது கலவையான விமர்சனத்தையே எதிர்கொண்டது. வேள்பாரி, வாடிவாசல் உள்ளிட்ட நாவல்கள் திரைப்படங்களாக வெளிவர உள்ளன. மேற்கத்திய திரைக்கலைஞர்கள் சிறந்த நாவல்களை வைத்து சிறந்த திரைப்படங்களைப் படைக்கின்றனர் ஆனால் தமிழ்நாட்டுத் திரைக்கலைஞர்களுக்கு இத்தகைய செயல்பாடு கைகூடுவதில்லை என்ற வாதம் நீண்ட காலமாகவே உள்ளது.

இதனை மையமாக வைத்து, 1966ஆம் ஆண்டு ‘பொம்மை’ இதழில் ‘சிறந்த தமிழ் நாவல்கள் வெற்றிப் படங்களாவதில்லை, ஏன்?’ என்ற தலைப்பில் விவாதம் நடத்தப்பட்டுள்ளது. இவ்விவாதம் எழுத்தாளர்கள், திரைப்பட இயக்குநர்கள், வாசகர்கள்-ரசிகர்கள் என மூன்று தளங்களில் நடைபெற்றுள்ளது. அதனை விரிவாக இங்கு காண்போம்.

### ‘பொம்மை’ இதழ்

பொம்மை மாத இதழ் 1966ஆம் ஆண்டு ஜூலை மாதம் தொடங்கப்பட்டுள்ளது. இந்த இதழ் வண்ணப்படங்கள், நடிகர்கள் - இயக்குநர்களின் தொடர்கள், கேள்வி-பதில்கள், திரைப்பட விளம்பரங்கள், படக்கதைகள், நாடகங்கள் என வெகுசனத் தன்மையுடன் வெளிவந்துள்ளது. இதன் ஆசிரியர் விஸ்வம். முதலில் வெளிவரும்போது இந்த இதழின் விலை 75 காசு. சென்னை, டால்டன் பப்ளிகேஷன்ஸ் இதனை வெளியிட்டுள்ளது.

1966ஆம் ஆண்டு அக்டோபர் மாதம், புகழ்பெற்ற நாவல்கள் தொடர்ந்து தமிழில் திரைப்படமாக்கப்பட்டாலும் அவை சிறந்த திரைப்படங்களாக அமையவில்லையென குறிப்பிடப் பட்டுள்ளது. இதற்கான காரணத்தை அறிவதற்கும் எதிர்காலத்தில் நாவல்களைக் கொண்டு சிறந்த திரைப்படங்களை உருவாக்குவதற்கும், ‘சிறந்த தமிழ் நாவல்கள் வெற்றிப் படங்களாவதில்லை, ஏன்?’ என்ற விவாதத்தை பொம்மை முன்னெடுத்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளது.

### எழுத்தாளர்களின் கருத்துகள்

முதலில் அக்டோபர் (1966) இதழில் இரண்டு எழுத்தாளர்களுடைய கருத்துகள் வெளியிடப்பட்டுள்ளன. ஒருவர், எழுத்தாளர் அகிலன். இவரின் ‘பாவை விளக்கு’, ‘அன்பு எங்கே?’ (குல மகள் ராதை) ஆகிய நாவல்கள் திரைப்படங்களாக வெளிவந்துள்ளன. இத்துடன் சினிமாத்





எழுத்தாளர் அகிலன்

துறையிலும் பணியாற்றியவர் என்ற வகையில் அவரின் கருத்துகள் ஆர்வமூட்டக்கூடியவை.

நான்கு ஆண்டுகள் சினிமா அனுபவத்துடன் சேர்த்து 20 நாவல்களையும் எழுதியுள்ளதால் இது குறித்துப் பேசுவதற்குத் தனக்கு உரிமையுண்டு என அகிலன் குறிப்பிட்டுள்ளார். அகிலனின் 'பாவை விளக்கு' நாவல் திரைப்படமாக ஏ.பி. நாகராஜன் திரைக்கதை, வசனத்தில் வெளிவந்தது. அதனைத் உருவாக்கும்போது இயக்குநர் ஏ.பி. நாகராஜனுடன் இணைந்து பணியாற்றி உள்ளார் அகிலன். சிறந்த நாவலாக அறியப்பட்ட 'பாவை விளக்கு' திரைப்படமாக வெற்றிபெறவில்லை. இது தனக்கு ஒரு தோல்வி என அகிலன் குறிப்பிடுகிறார். இத்துடன் மேலைநாட்டினர் மேற்கொள்ளும் விதிகளின் அடிப்படையில் 'பாவை விளக்கு' திரைப்படம் அமைக்கப்படாததையும் காரணமாகக் கூறுகிறார். மேலும், அவர் குறிப்பிடும் கருத்துகள் பின்வருமாறு,

"ஒரு நாவலை, சினிமாவுக்கு ஏற்றபடித் தழுவி அமைக்க மூன்று முதல் ஆறு மாதம்வரை பிடிக்கும். இது சற்றேறக்குறைய மற்றொரு நாவல் எழுதுவது போலத்தான். இந்தக் காரியத்தை, திரைக்கதாசிரியர், நாவலாசிரியரோடு இணைந்து செய்ய வேண்டும். இல்லாவிடில் நாவலாசிரியரே, திரைக்கதை அமைக்கும் கலையில் வல்லவராக இருக்க வேண்டும் அல்லது திரைக்கதை அமைக்கும் ஆற்றல் படைத்தவருக்கு நாவல் எழுதும் கலையும் தெரிந்திருக்க வேண்டும். மேலை நாடுகளில் திரைக்கதை ஆசிரியர்கள் என்று தனியாக இருக்கிறார்கள். நாவலாசிரியர்கள் பெரும்பாலும் அங்கு திரைக்கதை அமைப்பதில்லை. ஆனால் திரைக்கதை அமைப்பவர்கள் நாவலாசிரியரோடு நன்கு விவாதித்து திரைக்கதை அமைக்கிறார்கள்."

அடுத்து, எழுத்தாளர் சாண்டில்யன் நாவலாசிரியரின் தரத்திற்கு நாவலைத் திரைக்கதையாக மாற்றும் அளவுக்கு திரைக்கதை ஆசிரியர் உயரவேண்டும் என்று கூறியிருக்கிறார். இத்துடன் திரைக்கதையாசிரியருக்கு சுதந்திரம் கொடுக்கப்பட வேண்டும். 'டிஸ்கஷன்' என்ற பெயரில் நடிகர், நடிகை, படத்தயாரிப்பாளர் முதலியோரின் இடையீடு திரைப்படத்திற்குச் சிக்கலை ஏற்படுத்துகிறது என்றும் வருத்தம் தெரிவிக்கிறார். 'இப்படி வீண் தலையீடு ஏதுமின்றி தரமான ஒரு திரைக் கதாசிரியன் நல்ல ஒரு மூலக்கதையை எடுத்து திரைக்கு அமைத்தால் அதற்கு வெற்றி நிச்சயம்' என்பது அவருடைய கருத்தாகும்.


### திரைப்பட இயக்கநர்களின் கருத்துகள்

1966 நவம்பர் மாத பொம்மை இதழில் இரண்டு இயக்குநர்களுடைய கருத்துகள் பதிவு செய்யப்பட்டுள்ளது. முதலில், தயாரிப்பாளரும் இயக்குநருமான ஸ்ரீராமுலு நாயுடுவின் கருத்துகள் இடம்பெற்றுள்ளன.

'ஒரு நாவலைத் திரைப்படத்திற்காகத் தேர்ந்தெடுக்கும்போது மூன்று விசயங்களைக் கவனிக்க வேண்டுமென்கிறார் இவர். அவை,

1. நாவலாசிரியர் வலியுறுத்த விரும்புவது.
2. புதுமையான பாத்திரப் படைப்பு.
3. நாவலில் உள்ள தத்துவம் அல்லது இலட்சியம்.


இவற்றினை அலசி பார்த்தால்தான் சிறந்த திரைப்படமாக அதனை உருவாக்க முடியும் என்கிறார். மேலும், ஸ்ரீராமுலு நாயுடு குறிப்பிடுவது,



எழுத்தாளர் சாண்டில்யன்



நாமக்கல் கவிஞர் வெ.ராமலிங்கம்பிள்ளை




“திரைப்படங்களுக்கு முக்கியமான சில அடிப்படையான சம்பவங்கள் இன்றும் தேவைப்பட்டு வருகின்றன. படம் பார்க்க வரும் சாதாரண பாமர ரசிகனுக்கு வெறும் கதையை மட்டும் சொன்னால் போதாது! அவனுக்கு கதையுடன் பாட்டுகளைத் தரவேண்டும், ஹாஸ்ய நிகழ்ச்சிகளைப் பின்னித் தரவேண்டும், கண்ணுக்கு விருந்தாக நடனங்களையோ, வேறு காட்சிகளையோ இணைத்துத் தரவேண்டும். இவையெல்லாம் ஒரு படத்தைப் பார்க்க வரும்போது, அதில் இருக்க வேண்டும், இருக்கும் என்ற நினைப்போடு தான் வருகிறான் அவன். எனவே சற்றேறக் குறைய இம்மாதிரியான சம்பவங்களைக் கொண்ட நாவல்களோ, அல்லது இம்மாதிரியான காட்சிகளை இணைப்பதற்கு இடம் தரும் அமைப்புள்ள நாவல்களோதான் பெருவாரியான மக்களைத் திருப்திப் படுத்தமுடியும்.”

ஸ்ரீராமுலு நாயுடு ‘மலைக்கள்ளன்’ திரைப்படத்தை இயக்கியவர். நாவலைத் திரைப்படமாக உருவாக்குதில் பெரும் வெற்றி பெற்ற திரைப்படம் அது. இத்திரைப்படம் ஆறு மொழிகளில் வெளியானது. இதன் மூலக்கதை நாமக்கல் கவிஞர் என்று அழைக்கப்படும் வெ. ராமலிங்கம் பிள்ளை எழுதியது. திரைக்கதை, வசனம் எழுதியவர் கலைஞர் மு. கருணாநிதி என்பதும் குறிப்பிடத்தக்கது.

அடுத்து, இயக்குநர் யோகானந்த் தனது கருத்துகளைத் தெரிவித்துள்ளார். இவர் கல்கியின் ‘பார்த்திபன் கனவு’ நாவலைத் திரைப்படமாக எடுத்தவர். இவருக்கு உதவியாக எழுத்தாளர் விந்தன், ஓவியர் மணியம் ஆகியோர் அத்திரைப்படத்தில் பணியாற்றினர். இருந்தபோதிலும் ‘பார்த்திபன் கனவு’ வெற்றிபெறவில்லை. ஒரு நாவலில் உள்ள சிறந்த விசயங்கள் வேறுவேறு விதமாக மற்ற படங்களில் பயன்படுத்தப்படுகின்றன, அதனால் அந்த நாவல் திரைப்படமாக உருவாகும்போது சுவாரசியம் இல்லாமல் போகிறது என்று குறிப்பிடுகிறார். பண வசதியும், பொறுமையும் நிறைந்த தயாரிப்பாளர்கள் இருக்க வேண்டும் என்பதும் அவருடைய கருத்தாகும்.

இந்த விவாதப் பகுதியின் மூன்றாம் கட்டமாக ரசிகர்களின் கருத்துகள் டிசம்பர் மாத இதழில் வெளியிடப்படும் என்றும் அதனால் வாசகர்கள் தங்களது அபிப்பிராயங்களை எழுதி அனுப்பும்படியும் நவம்பர் மாத இதழில் ஆசிரியர் கேட்டுள்ளார். ஆனால் 1966ஆம் ஆண்டு டிசம்பர் மாத பொம்மை இதழில் இந்த விவாதம் குறித்த எந்தத் தரவுகளும் இடம்பெறவில்லை.

### வாசகர்கள் – ரசிகர்களின் கருத்துகள்

இதற்கடுத்து, 1967ஆம் ஆண்டு ஜனவரி மாத இதழில் ஜனனீ, ஜனகராஜன் ஆகிய இரு வாசகர்களின் கருத்துகளை வெளியிட்டுள்ளனர். ஜனனீ என்பவர், ‘இயக்குநர், தயாரிப்பாளர், நடிகர்கள் தாங்கள் செய்யும் செயலைக் கருத்தூன்றி செய்ய வேண்டும்’ என்றும் ’ரசிகர்களும் தங்களுடைய ரசனைத் தன்மையினை உயர்த்த வேண்டும்’ என்றும் குறிப்பிட்டுள்ளார். ஜனகராஜன் என்பவர் திரைப்படமாகும் நாவலைப் பார்க்கும்போது ரசிகர்கள் அடையும் எட்டு வகை ஏமாற்றங்களைப் பட்டியலிட்டுள்ளார். நாவலின் ஜீவநாடி இல்லாமல் இருப்பது, நாவலின் நிகழ்ச்சிகள் நீக்குதல் அல்லது புதிதாகச் சேர்த்தல், கால வரையறையால் ஏற்படும் சிக்கல், நாவலாசிரியரின் இலட்சியம் இல்லாமல் இயக்குநரின் இலட்சியத்தினைப் புகுத்துதல், நாவலின் உரையாடல் வசனமாக மாறுகையில் ஏற்படும் சிக்கல், நாவலின் வர்ணனைக்கு ஏற்ற நடிகர் இல்லாமை அல்லது நடிக்காமை. பாத்திரங்களை உணர்ந்து நடிக்காமை, நாவலில் உள்ள காட்சி அமைப்புகள்

இல்லாமை எனத் தனது கருத்தை விரிவாகக் குறிப்பிட்டுள்ளார். இத்துடன் இந்த 1967 ஜனவரி இதழில் அடுத்த பிப்ரவரி இதழோடு இந்த விவாதம் முடிவுடையும் இதற்குமேல் வாசகர்கள் யாரும் இப்பகுதிக்கு எழுதி அனுப்ப வேண்டாம் என்கிற குறிப்பு ஆசிரியரால் கொடுக்கப்பட்டுள்ளது.

1967 பிப்ரவரி இதழில் ப. குணசேகர், தஞ்சைத் தம்பி, எஸ். பி. ஸ்ரீநிவாசன் ஆகிய மூன்று வாசகர்களின் கருத்துகள் இடம்பெற்றுள்ளன. இதில் ப. குணசேகர், 'நாவல் என்பது அருவியைப் போன்றது, திரைப்படம் என்பது அருவியைப் புகைப்படம் எடுப்பதைப் போன்றது. மேலை நாட்டவர்கள் புகைப்படக் கருவியைக் கையாளுவதில் கைத்தேர்ந்தவர்களாக உள்ளனர். நம்மவர்கள் அவ்வாறு இல்லை' என்கிறார்.

தஞ்சைத் தம்பி, 'ரசிகர்களின் ரசனைத்தன்மை உயர்ந்தால் நாவல்கள் சிறந்த திரைப்படங்களாக வெற்றி பெறும்' என்கிறார். எஸ்.பி. ஸ்ரீனிவாசன், 'நாவல்கள் சிறந்த திரைப்படங்களாக உருவாவதற்குக் காரணம், திரைப்பட உலகில் நிலவும் சிக்கல்தான்' என்கிறார். குறிப்பாக பணம் மட்டுமே நோக்கமாகக் கருதும் போக்கும் இலக்கியம் குறித்து தெரியாத நபர்கள் திரைப்பட உலகில் ஆதிக்கம் செலுத்தும் போக்கும் காரணமென்கிறார்.

இவற்றுடன் 'சிறந்த தமிழ் நாவல்கள் ஏன் வெற்றிப் படங்கள் ஆவதில்லை, ஏன்?' என்ற விவாதம் முற்றுப்பெறுகிறது.

### இறுதியாக

தமிழ்த் திரையுலகம் நீண்ட காலமாக நாவல்களைத் திரைப்படமாக உருவாக்குவதில் பல்வேறு முயற்சிகளை எடுத்துள்ளது; இடர்ப்பாடுகளைச் சந்தித்துள்ளது; புதிய திறப்புகளையும் உருவாக்கியுள்ளது. எழுத்தாளர் அகிலன் குறிப்பிட்டதுபோல, இன்னும் கூட தமிழ் திரைப்பட உலகில் திரைக்கதை எழுதுபவர்கள் எனத் தனியாக ஒரு பிரிவு உருவாகவில்லை என்பது கவனத்திற்குரியது. வசனம் எழுதுவதற்கு எழுத்தாளர்களை இணைத்துக் கொள்ளும் போக்கு அண்மையில் அதிகரித்து வருகிறது. சிறந்த நாவல் - சிறந்த திரைப்படம் என்னும் செயல்பாட்டினை நோக்கி நகர்வதற்கு இத்தகைய கடந்தகால விவாதங்கள் ஏதேனும் ஒருவகையில் பயன்படக்கூடியவையாக உள்ளன.



Research papers of Iravatham Mahadevan and R. Balakrishnan are available in RMRL Digital Library. Follow the link to find the papers. Contact us to host your research papers in RMRL Digital Library.

rmrl.in/en/dl/research-papers

# *Upcoming events at RMRL*

**08 - 02 - 2025, 5.30 pm : IVC Deep Astronomy: Harappan Celestial Omens List**

Mr .Sukumar Rajagopal (Indus Researcher)

**14 - 02 - 2025, 5.30 pm : Exploring Indian and Tamil Ancestry Through Genetics: Methods and Recent Findings**

Prof. Raj Mutharasan (Researcher & Educator).